DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No.207/2021
*****

Deposition of Witness for Prosecution witness No: PW6

| | |
|---|---|
| Name | : அறிவழகன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 05.07.2022 |

Solemnly affirmed by Thiru.S.Chandra Sekar, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இனாம் கோவில்பட்டி இந்திரா காலனியில் குடியிருந்து வருகிறேன். செண்டிரிங் வேலை செய்து வருகிறேன். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள் ஆஜர் எதிரி, குருசாமியை அவரது வீட்டில் வைத்து இரவு சுமார் 10, 11 மணியளவில் வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன். அவர்களுக்குள் என்ன பிரச்சினை என்று நான் விசாரிக்கவில்லை. சம்பவம் குறித்து கேள்விபட்டு நானும், சாட்சி முனியாண்டியும் குருசாமியை பார்க்க திருநெல்வேலி ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு சென்றிருந்தோம். அங்கு ஏற்கனவே என்னுடைய உறவினர் மாடசாமி என்பவர் கால் ஒடிந்து சிகிச்சைக்கு அதே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அவருக்கு பக்கத்து

பெட்டில் குருசாமி இருந்ததால் அவரையும் பார்த்தோம். அங்கு போலிசார் யாரும் வரவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது கிடையாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

கடந்த 19.12.2019 இரவு 9.30 மணியளவில் அ.சா.1 முதல் அ.சா.3 தங்களது உறவினரான பச்சை குஞ்சு என்ற குருசாமி வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பும்பொழுது ஆஜர் எதிரி பச்சை குஞ்சு என்ற குருசாமி வீட்டின் முன்பு பைக்கை நிறுத்தியதை அ.சா.1 முதல் அ.சா.3 தட்டி கேட்ட பொழுது எதிரி அவர்களை பார்த்து கூதிபிள்ளைகளா என்று கெட்ட வார்த்தையால் பேசி அவர்களை சத்தம் போட்டு இன்னைக்கு விடியுங்குள்ள உங்கள என்ன செய்கிறேன் என்று சொல்லி பின்னர் இரவு 1.00 மணியளவில் எதிரி அ.சா.1 முதல் அ.சா.3 வீட்டிற்கு அத்துமீறி நுழைந்து அ.சா.2ஐ கொலை செய்யும் நோக்குடன் அரிவாளால் அ.சா.2ன் கழுத்தை பார்த்து வெட்டுமபொழுது அ.சா.2 இடது கையால் தடுத்ததில் அந்த வெட்டு அ.சா.2ன் இடது கையில் பட்டது என்றும், பின்னர் அ.சா.1 சத்தம் போட மீண்டும் எதிரி அரிவாளால் அ.சா.2ன் இடது மேல் மார்பில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் பின்னர் அருகில் உள்ளவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகிரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்னர் மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததை நான் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். நாங்கள் அ.சா.2ஐ மருத்துவமனையில் பார்க்க சென்ற பொழுது போலிசார் எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் ரத்தம் படிந்த உடைகளை கைப்பற்றி எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாக

போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரி தரப்பில் கேட்டு கொண்டதின் பேரில் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் என்னுடையது கிடையாது என பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.